2. தகவல் கோரல்

(அ) எதிர்க்கட்சித் தலைவரைப் பற்றி சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் பொதுக் கூட்டத்தில் பேசியது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்பாக காவல் துறை மானியக் கோரிக்கை நடைபெற்றது. அதில், எங்களுடைய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அரசின் தவறுகளைச் சுட்டிக்காட்டி, அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். ஆனால், சட்டமன்ற உறுப்பினர் ஒருவர், இங்கே அந்த நேரத்தில் குற்றச்சாட்டுகளைச் சொல்லாமல், வெளியிலே சென்று எதிர்க்கட்சித் தலைவர் இந்த அரசின் தவறுகளான* **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. அர. சக்கரபாணி, நான் சொல்வதைக் கேளுங்கள். வெளியில் சென்று பேசுவதைப்பற்றியெல்லாம் நான் ஒன்றும் சொல்ல முடியாது. (குறுக்கீடு) அவர்கள் இங்கே பேசாததற்கு நான் பொறுப்பல்ல. (குறுக்கீடுகள்) இந்த விவகாரத்தைப்பற்றியெல்லாம் ஏற்கெனவே இந்த அவையிலே விரிவாக விவாதிக்கப்பட்டு, என்னால் அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. அனுமதி மறுக்கப்பட்டிருக்கிற விஷயத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள் மீண்டும் எழுப்புவது முறையல்ல. வேறு ஏதாவது பிரச்சினையிருந்தால் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

இதுகுறித்துப் பேச வேண்டாம். அவ்வளவுதான், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் தேவையில்லாததையெல்லாம் கேட்டிருக்கிறீர்கள். ஆகவே, அவற்றையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகின்றேன். (குறுக்கீடுகள்) நீங்கள் வேறு ஏதாவது பிரச்சினை குறித்துப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. அர. சக்கரபாணி, முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சி உறுப்பினர்கள்

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

அனைவரையும் முதலில் உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் இருக்கையில் அமருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்கார்ந்தால்தான் நான் அனுமதி கொடுக்க முடியும். இப்படியெல்லாம் நின்றுகொண்டு பேசினால், வற்புறுத்தினால் நான் அனுமதி தர முடியாது. திரு. சக்கரபாணி, நான் உங்களுக்கு பேச வாய்ப்பு தந்தேன் அல்லவா? நீங்கள் பேச வேண்டியதை சரியாகப் பேசினால் ஏன் இந்தப் பிரச்சினை வருகிறது? (குறுக்கீடு) வேறு என்ன பிரச்சினை என்பதைச் சொல்லுங்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களால், இந்த அரசின் தவறுகளான, கடந்த கூட்டத் தொடரிலே. . .

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து நின்று கொண்டே இருந்தனர். முனைவர் க. பொன்முடி, திரு. எ.வ. வேலு ஆகியோர் முன்வரிசைப் பகுதிக்கு வந்து பேசிக் கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அந்த சப்ஜெக்ட் பற்றி பேச வேண்டாம். அதெல்லாம் வெளியிலே ஆயிரம்பேர் மேடையில் பேசுவார்கள். அதற்கெல்லாம் பதில் இந்த அவையிலே சொல்ல முடியாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வெளியில் பேசியதற்கு நீங்கள் வெளியிலேயே பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்களுக்கு நான் என்ன சொல்கிறேன் என்றால், வெளியில் சென்று பேசியதற்கு. . . (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நான் சொல்கின்றேன். (குறுக்கீடுகள்) நீங்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, உங்களுக்குத்தான் நான் பேச அனுமதி கொடுத்துவிட்டேன் அல்லவா? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முனைவர் பொன்முடி, உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதை நீங்கள் கேளுங்கள். (குறுக்கீடுகள்) முனைவர் பொன்முடி, நீங்கள் உங்கள் இருக்கைக்குச் சென்று, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு

2017 ஜூலை 10] [பேரவைத் தலைவர்]

உறுப்பினர் முனைவர் பொன்முடி, நீங்கள் உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள், உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, நான் உங்களுக்குத்தான் பேச வாய்ப்பு தந்தேன் அல்லவா? (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) யார் பேசுவார்கள்? (குறுக்கீடுகள்) அதெல்லாம் நான் எப்படி கேட்க முடியும்? (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் உட்காருங்கள்.

முற்பகல் 11–20

மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். நான் சொல்கிறேன், உட்காருங்கள். நீங்கள் கேட்ட கேள்விக்கு நான் பதில் சொல்கிறேன், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், இப்போதுதானே ஒரு கேள்வியைக் கேட்டீர்கள்; பிறகென்ன? உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொன்முடி, உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின், உட்காருங்கள். இன்றைக்கு நிறைய அலுவல்கள் இருக்கின்றன, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, நான் சொல்வதைக் கேட்டுக்கொள்ளுங்கள். நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் வெளியில் பொதுக் கூட்டங்களிலோ, வெளியிடங்களிலோ பேசியவற்றிற்கெல்லாம் இங்கே வந்து கேள்வி கேட்டால் என்னால் அனுமதி கொடுக்க முடியாது. (குறுக்கீடுகள்) வெளியிலே பேசியவற்றிற்கு நீங்கள் வெளியிலேதான் பதில் சொல்ல வேண்டும். இங்கே பேச விருப்பப்படுகிற உறுப்பினர்கள் முறையாக என்னிடம் அனுமதி கேட்டால் நான் முறையாக அனுமதி வழங்கத் தயாராக இருக்கிறேன். ஆனால், நீங்கள் அவர்களை பதில் சொல்லச் சொல்லுங்கள் என்று சொன்னால், நான் அப்படியெல்லாம் சொல்ல முடியாது. உறுப்பினர்கள் வெளியிலே பேசியதற்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டுமென்று நினைத்தால், நீங்கள் வெளியிலே

தாராளமாக உங்கள் பதிலைச் சொல்லுங்கள். இந்த அவையிலே அதற்கு நான் அனுமதி கொடுக்க முடியாது. அது முறையும் அல்ல, மரபும் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து நின்று கொண்டிருந்தனர்.)

உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. நேரு அவர்கள் ஒரு கேள்வி கேட்கவிருக்கிறார், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். திரு. சக்கரபாணி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மைக் தருகிறேன், உட்காருங்கள். உட்கார்ந்தால்தானே மைக் தர முடியும். இப்படி நின்று கொண்டிருந்தால் எப்படி மைக் தர முடியும்? (குறுக்கீடுகள்) இப்படி நின்று கொண்டிருந்தால் மைக் தர முடியாது. உட்காரச் சொல்லுங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்கார்ந்தால்தான் நான் வாய்ப்புத் தருவேன். இல்லையென்றால் வாய்ப்புத் தர மாட்டேன். திரு. எஸ்.ஆர். இராஜா, இதெல்லாம் முறையல்ல, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, வேறு ஏதாவது புதிய பிரச்சினை குறித்த விஷயம் பேசுவதாக இருந்தால். . . (குறுக்கீடுகள்) அதற்கெல்லாம் அனுமதியில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு, பேசுவதானால் பேசட்டும், இல்லையென்றால் அனுமதி மறுக்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் சேர்ந்து அவருடைய பிரச்சினையை எழுப்பவிடாமல் தடுப்பதாக இருந்தால் தடுங்கள். நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடுகள்) எதற்கு? அது முடிந்துவிட்டது, நான் ruling கொடுத்துவிட்டேன். Ruling கொடுத்ததற்குப் பிறகு மீண்டும் பேச முடியாது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இதோ பாருங்கள் திரு. சக்கரபாணி, இந்தச் சபையில் நீங்கள் நிறைய அனுபவம் வாய்ந்தவர். சபாநாயகர் ஒரு ruling கொடுத்த பிறகு, அதன்மீது மீண்டும் பேசுவதற்கு அனுமதி கேட்பது முறையல்ல. (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினர்கள் இன்றைக்கு வித்தியாசமாக அனுமதி கேட்கிறார்கள். நீங்கள் உங்களுடைய வேகத்தையெல்லாம் வெளியிலே வைத்துக்கொள்ளுங்கள். சபையில் அதையெல்லாம் நான் அனுமதிக்க முடியாது; அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, சொல்வதைக் கேளுங்கள். இங்கே அவையினுள் உங்களைக் குறித்துப் பேசினால், நீங்கள் பதில் சொல்வதற்கு உடனடியாக வாய்ப்புத் தருவேன். அதேபோன்று நீங்கள் அவ்வாறு

பேசினால், இந்தப் பக்கம் யாரும் வாய்ப்புக் கேட்டால் தருவேன். வெளியிலே பேசியதற்கெல்லாம் வாய்ப்புத் தர முடியாது. (குறுக்கீடுகள்) Ruling கொடுத்து முடிந்துவிட்டது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இப்போது சபையை நடத்த ஒத்துழைக்கப் போகிறீர்களா, இல்லையா? உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இதற்கெல்லாம் மைக் தர மாட்டேன். உட்காருங்கள். தயவுசெய்து உட்காருங்கள். நான் சொல்வதை நீங்கள் கேளுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் எதிர்க்கட்சித் தலைவரும், துணைத் தலைவரும் இன்றைக்கு வரவில்லை. அதற்குப் பதிலாக கொறடா திரு. சக்கரபாணி அவர்கள் மிகவும் கோபமாக, வேகமாகச் செயல்பட்டு அவர்களுடைய இடத்தை நிரப்புவதற்காகப் பேசுகிறீர்கள் என்பது எனக்குப் புரிகிறது. ஆனால், என்னால் அனுமதிக்க முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இன்னும் ஒரு மணி நேரம் இதேமாதிரி இந்தப் பிரச்சினையை கிளப்பிக்கொண்டே இருந்தாலும் நான் அனுமதி தர மாட்டேன். நான் சொன்ன தீர்ப்பு தீர்ப்புதான். அந்தத் தீர்ப்பிற்குக் கட்டுப்பட்டு, சபையை நடத்த ஒத்துழைப்புக் கொடுங்கள். (குறுக்கீடுகள்) வேறு என்ன பேச வேண்டும், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதல்வர் என்ன பதில் சொல்ல வேண்டும்? (குறுக்கீடுகள்) நான்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. நேரு அவர்களை அனுமதிக்கப் போகிறேனே! திரு. நேரு அவர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பவிருக்கிறார், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி ஒரு பிரச்சினையை எழுப்பவிருக்கிறார். நான் அதற்கெல்லாம் அனுமதி தருகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11–25

அனுமதி தர வேண்டாமா? (குறுக்கீடுகள்) அனுமதி தர வேண்டாமென்றால் நான் வேறு அலுவலுக்குப் போகிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் நின்று கொண்டே இருங்கள். நான் ஒன்றும் பேச முடியாது. (குறுக்கீடுகள்) இல்லை, நான் இதற்கு ஒன்றும் செய்ய முடியாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு, நீங்கள் பிரச்சினையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதாக இருந்தால், கொண்டு வரலாம். நான் அனுமதி கொடுக்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்களும் நின்று கொண்டே இருந்தால், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்புக்கு நான் போகிறேன். (குறுக்கீடுகள்)

என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, ஒரு நிமிடமும் தரமாட்டேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, நீங்கள் முதலில் உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள், இப்படியெல்லாம் வற்புறுத்தி என்னிடம் அனுமதி வாங்க முடியாது. (குறுக்கீடுகள்) நானாகப் பார்த்து அனுமதி கொடுத்தால்தான் உண்டு. ஆகவே, நீங்கள் இப்படி வற்புறுத்த முடியாது. அதனால் நீங்கள் உட்காருங்கள். நாளைக்குப் பார்க்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

(ஆ) திருச்சி மாவட்டம், பொத்தமேட்டுப்பட்டி, இரும்புக் கடை வெடி விபத்தில் பாதிக்கப்பட்டோருக்கு நிதியுதவி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், நீங்கள் உட்காருங்கள்.*

***திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், மணப்பாறை அருகில் இருக்கின்ற பொத்தமேட்டுப்பட்டி என்ற இடத்தில் அருள் ஆனந்த் என்பவர் மாதா டிரேடர்ஸ் என்கின்ற பழைய இரும்புக் கடை ஒன்றை நடத்திக் கொண்டு வருகிறார். ஜுன் 26 ஆம் தேதி ஜீப்பில் வந்த சிலபேர் ஒரு மூட்டை இரும்பு உருண்டையை அவர்களிடம் எடை போட்டுக் கொடுத்துவிட்டு, அதற்கான பணத்தை வாங்கிச் செல்கிறார்கள். அப்படி பணம் வாங்கிச் சென்றபிறகு, ஜுன் 29 ஆம் தேதி அந்த இரும்பு உருண்டையை ஸ்கிராப் ஆக உடைக்க வேண்டுமென்று எண்ணி அருகில் இருக்கின்றவரை அழைத்து அதை உடைக்கச் சொல்கிறார். அருகில் இருக்கின்றவர் சென்று இரும்பு உருண்டையை உடைக்க, அது வெடித்து, அந்த இடத்திலேயே கடைக்காரருடைய கால்கள் இரண்டும் போய்விட்டன. யார் அந்த இரும்புக் குண்டை உடைத்தாரோ அவர் அதே இடத்தில் இறந்துபோய் விட்டார். பக்கத்தில் பஞ்சர் கடை வைத்திருந்த திரு. பாலு அவர்களும், திரு. கனகராஜ் அவர்களும் அந்த வழியாகப் போகின்றபோது, இந்த இரும்புத் துகள்கள் அவர்கள்மீது பாய்ந்து படுகாயமுற்று மருத்துவமனையில் இருக்கின்றார்கள். இதை திரு. நூர்முகம்மது என்பவர் உடனடியாக காவல் துறைக்கு நேரடியாகச் சென்று தகவல் சொல்லியிருக்கிறார். இதுவரை எந்தவிதமான உதவியும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இறந்தவர் மிக மிக*